# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 06.01.2023

**வருவாய் மாவட்ட வாரியாக கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் !**

**ஜனவரி 21ஆம் தேதி நடைபெறவிருந்த தஞ்சாவூர் வருவாய் மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் ஜனவரி 20ஆம் தேதி நடைபெறும்.**

இதயதெய்வம் அம்மா அவர்களின் மக்கள் நலக்கொள்கைகளை நெஞ்சில் தாங்கி செயல்படும் அம்மா மக்கள் முன்னேற்றக் **கழக வளர்ச்சி பணிகள் குறித்த, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம், கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் தலைமையில் சென்னை, தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.**

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் வரும் 21ஆம் தேதி நடக்கவிருந்த நிலையில், தேதி மாற்றப்பட்டு ஒரு நாள் முன்னதாக 20.01.2023-வெள்ளிக்கிழமையன்று நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட **தலைமைக் கழக நிர்வாகிகள், கழக அமைப்பு செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாநில செயலாளர்கள், கழக செய்தி தொடர்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் தவறாது பங்கேற்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**